1972 ஆகஸ்ட் 18]

Prices of Essential Commodities

*55. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Government are aware of the increasing trend in prices of essential commodities in the State; and

(b) the steps proposed to be taken by the Government to arrest rise in prices of essential commodities?

இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தைப் பற்றி அரசு அறியுமா?

(இ) இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) பொதுவாக, விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை. 1972 ஜனவரியிலிருந்து முதன்மை அறுவடையைத் தொடர்ந்து அரிசி விலைகள் இறங்கின. ஆனால் சென்னை மாநகரிலும் பிற இடங்களிலும் முதல் ரக நேர்த்தியான ரக அரிசியின் விலைகள் உயர்ந்துள்ளன. பெரும்பாலும் இதற்குக் காரணம் மக்கள் நேர்த்தியான அரிசி ரகங்களை விரும்புகின்றனர். அதனால் இத்தகைய ரகங்களின் இருப்பு மிகக் குறைவாகவுள்ளதால் இவற்றின் விலைகள் உயருகின்றன. ஆயினும், இம் மாநிலத்தில் ADT 27 போன்ற அரிசி ரகங்களின், நடுத்தர அரிசி ரகங்களின் விலைகள், 1971 ஜூலையில் நிலவிய விலைகளை விட குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 10 வரை குறைந்துள்ளன. வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை சிறிது அதிகமாகவே உள்ளது. இவ்வாண்டில் சர்க்கரை உற்பத்தி குறையுமென எதிர்பார்க்கப்படுவதாலும், அங்காடிகளுக்கு குறைவான அளவுக்கே சர்க்கரை வழங்கப்படுமென்பதாலும் சர்க்கரை விலை உயர்ந்திருப்பதற்குக் காரணங்களாகும். சோளம், மக்காச்சோளம், மிளகாய், புளி இவற்றின் விலைகள் இறங்குமுகமாய் உள்ளன. சமையல் எண்ணெய்களின் விலைகள் 1972 ஏப்ரல் வரை படிப்படியாக இறங்கி வந்தன.